Koodarathin **SATHAM**

# கூடாரத்தின் சத்தம்


மிஷனெரி மாத இதழ்

OCT & NOV 2018

## இரட்சிப்பின் பாதைகள்

பாகம்-2





Koodarathin SATHAM
# கூடாரத்தின் சத்தம்
மிஷனெரி மாத இதழ்

KING TABERNACLE
South India MISSIONARY MISSION

## தரிசனம்

ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம்
பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும்
சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்,
அப்போது முடிவு வரும் (மத்தேயு 24:14)

நம்முடைய பிரதான தரிசனம் தென்இந்தியாவில்
அறிவிக்கப்படாத கிராமப்பகுதியில் சுவிசேஷத்தை
அறிவித்து, சபையை உருவாக்கி, சீஷத்துவ
பயிற்சியளித்து அந்தந்த கிராமத்தில் ஊழியர்களை
ஏற்படுத்துவோம். மற்றும் ஒவ்வொரு கிராமத்தில்
எங்களால் முடிந்த பொது சேவையை செய்து.
(கல்வி, மருத்துவமனை, பொது காரியம்)
அவர்களை நித்திய ராஜ்ஜியத்திகு நேராக
சேர்க்கும் பணியை செய்து வருகிறது.
நாம் வாழும் இந்த தென் இந்தியாவில்
அறிவிக்கப்படாத எவ்வளாவோ கிராமம்
இருக்கிறது.
ஆகவே!
ஜெபிப்போம்! செயல்படுவோம்!!

## உங்கள் தொடர்புக்கு

**தலைமை இடம் :** கோவை
சகோ. ஜெபராஜ்
99449 50984

**தரிசன விரிவாக்கப்பணியில் :**
பொள்ளாச்சி : பாஸ்டர். டேவிட்மணி
93847 41252

தூத்துக்குடி : சுவி. கிப்சன் தினேஷ்
9566888073

**அலுவலக காரியங்களுக்கு**
சகோதரி. கிரேஸ் பிரிஸிலா
93847 41252

**எமது முகவரி**
KING TABERNACLE
South India MISSIONARY MISSION

1/1C, Rajaji Nagar, BiMetal Berring
Company Back Side Road,
P.N. Pudur, Coimbatore 641041.
INDIA

**e :** info@kingtabernacle.com
**www.kingtabernacle.com**



# ஜெபிக்கும் நண்பர்கள்

**"ஞானவான்கள் கர்த்தருடைய கிருபைகளை உணர்ந்து கொள்வார்கள்" சங் 107:43**

பிரியமுள்ள தேவஜனமே நம்மில் அநேகர் இப்படித்தான் உயிர்பிக்கிற வேத பொக்கிஷம் நம் அருகில் இருப்பது தெரியாமல். சந்தோஷம், சமாதானத்தைத் தேடி அதைதந்து கொண்டிருக்கிறோம். இந்த நாட்களில் வேதத்தில் இருக்கிற பொக்கிஷங்களை நாம் கண்டு ஞானமடையும்படி நம்முடைய கண்கள் திறக்கப்படும் படியாக ஜெபிப்பது மிக அவசியம், உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும் படிக்கு, என் கண்களை திறந்தருளும்.

கடந்த மாதம் முழுவதும் தமது கிருபையினால் காத்து வழிநடத்தியவர் இம்மாதம் முழுவதும், நமது போக்கையும், வரத்தையும், கையின் பிரயாசங்களிலும், சுகத்திலும், பெலத்திலும், தொழில்களிலும், வேளைகளிலும், படிப்பிலும், ஊழியத்திலும், கர்த்தரின் கிருபையினாலும், ஞானத்தினாலும் ஆசீர்வதித்து நடத்துவாராக. ஆமென்.





தேவதயவும் இரக்கமும் மகாபெரியது! இவ்வூழியத்தை உள்ளத்தின் அழத்தில் நேசித்து, ஜெபத்தினாலும், பொருள் உதவிகளாலும், காணிக்கைகளினாலும், தாங்கிவருகிற தேவ பிள்ளைகளின் மேலான ஆதரவினாலும் இவ்வூழியம் இன்னும் ஆசீர்வதிக்கப்படுகின்றது. மேலும் செப் 13 அன்று **ஒத்தக்கால்மண்டபம்** நமது புதிய ஆலயத்தில் வைத்து ஒரு நாள் குடும்ப கூடகை நடைபெற்றது. சுமார் 45க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றனர். **Bro. ஜோசப் ராஜ்குமாா, கோவை** அவர்கள்

கலந்துகொண்டு தேவ செய்தியும், ஜெபமும் நடத்தினார். Rev. **சாந்தராஜ், கோவை** அவர்கள் ஆராதனை நடத்தினார்கள். இரண்டாம் பகுதியில் Bro. **சிவனேஷ் ராஜ், இலங்கை** அவர்கள் செய்தியளித்து ஜெபத்தில் நடத்தினார்.











செப் - 21 முதல் 23 வரை **வழுக்குப்பாறை** பகுதியில் விஷேசித்த கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்றது. இலங்கை எழுப்புதல் ஊழியங்களின் ஸ்தாபகர், தேவ மனிதர் **சகோ. சிவனேஷ்ராஜ்** அவர்கள் கலந்து கொண்டு மூன்று நாட்களும் தேவ செய்தி வழங்கினார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது. வழுக்குபாறை அந்த நாட்களில் கடைசி 2 நாட்கள் சபைக்கு விரோதமாக ஒருசிலர் எழும்பினர்கள் ஆனால் மலைப்போல் வந்த துன்பத்தை பனி போல கர்த்தர் மாற்றினார், எங்கு எதிர்ப்புகள் வருகிறதோ அங்கு எழுப்புதல் ஆரம்பித்துவிட்டது. ஆமென்!

அதே போல் நமது சகோதரரும் **P.N** புதூர் KTM சபை போதகருமான **கோவை.ஜெபராஜ்** அவர்கள் கடந்த மாதம் 25 செப்டம்பர் 2018 முதல் 1 அக்டோபர் 2018 வரை அந்தமான் தீவு பகுதிகளுக்கு சென்று ஊழியம் செய்து சுகம் பெலனோடு கோவை திரும்பினார். மிகவும் கடினமான தீவு பகுதிகளில் 12 மணி நேரம் பிரயாணம் செய்தும், பல சபைகளுக்கு சென்று ஜெபமும் தேவ வார்த்தை பகிர்ந்தும் வந்துள்ளார். பல மொழிகள் பேசும் மக்கள், பல கலாச்சாரங்கள் கொண்ட மக்கள், நம் தமிழ்நாட்டை விட எல்லாம் இரண்டு மடங்கு விலைவாசி அதிகம், எடுத்துக்காட்டு. 25ரூபாய் தண்ணீர் 70 ரூபாய், காய் கனிகள் விலை மிக அதிகம், அங்கே ஊழியம் செய்யும் மிஷெனரிகள் மிகவும் கடினத்தில் தான் வாழ்க்கிறார்கள், ஆனாலும் தன் சொந்த பந்தங்களையெல்லாம் விட்டு அங்கு பாரத்தோடு ஊழியம் செய்து வருகிறார்கள் அவர்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள்.

ஆமென்!!

உன்னதரின் ஊழியப்பணியில்
**KTM-SIMM குடும்பத்தார்**





# இரட்சிப்பின் பாதைகள்

பாகம்-2 / மிஷனெரி. பிரேம்குமார்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே உங்கள் யாவருக்கும் நமது இரட்சகராகிய இயேசுவின் ஈடு இணையற்ற நாமத்தில் எனதன்பின் நல்வாழ்த்துக்கள் கடந்த நாட்களில் இப்பத்திரிக்கை மூலம் உங்களை சந்தித்ததில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். நாம் இரட்சிக்கப்பட பிதா தன்குமாரனை அனுப்பியது பற்றி பாாத்தோம். தொடர்ந்து அதன் தொடர்ச்சியை பார்க்கலாம்.

பழைய ஏற்பாட்டில் (குமாரனை) இயேசு குறித்த தீர்க்கதரிசனம் எங்கே? சொல்லப்பட்டுள்ளது என்பதை தீர்மானிப்போம்.

பிரியமானவர்களே!

இயேசு இந்த உலகத்தில் பிறப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே பல தீர்க்கதரிசிகளால் பாவத்திலிருந்து நம்மை விடுவிக்க ஒருவர் பிறப்பார். அவர் மேசியாவாகவும், ராஜாவாகவும் வருகிறார் என்று தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டது. மேசியா என்று சொல்லப்படும் நம் இயேசுவைப் பற்றி பல இடங்களில் பழைய ஏற்பாட்டில் குறிப்பாக எனக்கு தெரிந்திரிக்கிறபடி 115 இடங்களில் பார்த்தேன். அதில் சிலவற்றை மட்டும் உங்கள் பார்வைக்கு காண்பிக்க ஆசைப்படுகிறேன்.

1. ஆதி 3:15- லூக்கா 3:15- இதில் இயேசுவிற்கு எதிராக சாத்தான் சில காரியங்களை செய்கிறான். ஆதி 3:15 -ல் போடப்பட்ட வார்த்தையின் அர்த்தத்தை கவனியுங்கள். அந்தப் பெண் (ஏவாள்) சர்ப்பத்தின் தந்திரம் தெரியாமல் பாவத்தில் விழுந்தாலே அதே போல் சர்ப்பத்தின் ( உலகத்தின்) தந்திரங்கள் எல்லாவற்றிக்கு தன்னை மாற்றி விலக்கி காத்துக்கொண்டு வாழும் ஒரு கன்னிப் பெண்ணின் மூலமாக இயேசு பிறந்து இந்த உலகத்தின் அதிபதியான சாத்தானின் தலையை நசுக்குவேன் என்ற அர்த்தத்தை பார்க்கிறோம்.

மேலும் பெண்ணின் கருமுட்டையை வித்து என்று சொல்லமாட்டார்கள் ஆனால் ஆதி 8:15 சொல்லப்பட்டுள்ள உன் வித்துக்கும் ஸ்திரியின்

வித்து என்றால் தேவனால் நிரப்பப்படும் பரிசுத்த ஆவியைத் தான் வித்து என்று முன்னதாகவே தீர்க்க தரிசனமாக சொல்லப்பட்டுள்ளது.

2. ஆதி 3:15, எபி 2: 14,15, 1 யோவான் 3:8 இதில் இயேசு உலகத்திற்கு வருவார் என்றும் அவருடைய மரணத்தினாலே சாத்தானை ஜெயிப்பார் எனவும் பிசாசினுடைய கிரியைகளை தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார் எனவும் எழுதியிருக்கிறது. இவைகள் சாத்தானை இயேசு ஜெயங்கொள்வார் என்று சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம்.

3. ஆதி 12:3 ,18:18, 22:18, 26:4 அப் 3:25-26, கலா 3: 8,9 பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் கிறிஸ்துவின் வருகைபற்றிப் சொன்னவைகள் உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்ற வாக்குத்தத்தம் தேவன் கொடுத்தார். அந்தத் சந்ததி கிறிஸ்து இயேவின் மூலமாக மனிதர்கள் விடுதலைப் பெற்று இம்மைக்கும் மறுமைக்குரிய ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

4. ஆதி 13: 15, 16 , கலா 3: 15-19 எனக்கு பிரியமானவர்களே,ஆபிரகாமின் வித்தான மேசியா, (விசுவாசத்தில்) ஆபிரகாமுக்கு ஆண்டவர் உன் சந்ததியை பெருகப் பண்ணுவேன் என்று வாக்குபண்ணினார். அவனுக்கு தேவன் கொடுத்த ஒரே பிள்ளை, அது எப்படி கடலின் மணல் போல் உள்ள சந்ததி என்று சொல்ல முடியும். ஆனால் ஆதி 15:6-ல் சொல்கிறது. (அவன் விசுவாச தகப்பன்) விசுவாசத்தின் படி தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வார்த்தையை நிறைவேற்றினார். எப்படி என்றால்.( ரோமர் 8:15) நாம் புத்திர சுவிகாரத்தின் ஆவியை பெற்று இருக்கிறோம் இப்பொழுது வாக்குத்தத்தின்படி நாம் அனைவரும் ஆபிரகாமின் பிள்ளகைள் இது யார் மூலம் நடைப்பெற்றது என்றால் இயேசு கிறிஸ்துவின் மூலம் தான்.

5. ஆதி 49:10, லூக்கா 1:32,33 சொல்லப்பட்டது போல் யூதாவிலிருந்து தோன்றப்போகிற ராஜா அவர்தான் இயேசு.

6. யாத் 12:1-14,46 யோவான் 19:31-36 1 கொரி 5:7 1 பேதுரு 1:19 சொல்லப்பட்டது போல் இயேசு பஸ்கா பலியாக நமக்காக பலியானார் என்பதை நினைப்பூட்டுகிறது.

7. யாத்16:4 யோவா 6:31-33 பழைய ஏற்பாட்டு நாட்களில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் வானத்திலிருந்து கொடுத்து திருப்திப்படுத்தினார். இன்று மேசியாவை அனுப்பி பாவத்தில் உள்ள ஜணங்களை பரிசுத்தத்தில் வர திருப்திபடுத்துவார்.



8. யாத் 24:8 எபி 9:11,28 மேசியாவின் இரத்தம் தியாக பலியாக சிந்தப்பட்டது யாருக்காக தெரியுமா? எனக்காகவும் உங்களுக்காவும் தான்.

பிரியமானவர்களே! சில இடங்களில் இயேசு என்றும் சில இடங்களில் கிறிஸ்து என்றும் கூறுகிறேனே கிறிஸ்து தெரியும் மேசியா யார் என்று கேட்கிறீர்களா? சொல்கிறேன் கவனமாக படியுங்கள் **மேசியா** என்று சொன்னால் **அபிஷேகம் பண்ணப்பட்டவர்** என்று அர்த்தம் இது எபிரெய பாஷையிலிருந்து வந்த பெயர் கிறிஸ்து என்பது கிரேக்க பாஷை சொல் ஆக இரண்டும் மேசியா என்ற ஒரே அர்த்ததை கொண்டது. இது இஸ்ரவேல் ராஜாக்கள் முதலாய் அபிஷேகம் பெற்ற யாவருக்கும் சொல்லத்தக்க வார்த்தை ஆனால் இஸ்ரவேலர்கள் தேவனால் நியமிக்கப்பட்ட ஒரு மேசியா வந்து தங்களை ஒரு பெரிய ஜாதியாக்கி, உலகம் முழுவதையும் அரசாளுவாரென்று எதிர்பார்த்து இருந்தார்கள். மற்றும் தங்களை விடுதலையாக்குவார் என்று நோக்கி கொண்டு இருந்தார்கள் ஆனால் மேசியா வந்து போனதையும் உணராதிருக்கிறார்கள்.

அந்நாளில் மேசியா வருவார் என்று நம்பி காத்துக் கொண்டு இருந்தவர்கள் யார்? எனக்கு அன்பான சகோதர, சகோதிரிகளே, மேசியா வருவார் என்று எண்ணி காத்துக் கொண்டு இருந்த ஜனங்கள் எல்லாருக்கும் தெரிந்து போல் “யூதர்கள்” தான். இயேசு இவ்வுலகத்திற்கு வருவதற்குப் பல நூற்றாண்டுகள் முன்பாகவே யூதர்கள் மேசியாவின் வருகைக்காக காத்திருந்தினர். ஏசாயா தீர்க்கதரிசி தமது மக்களின் பாவங்களையும் துக்கங்களையும் சுமந்து தீர்க்க போகிறவர் என்று வாக்களிக்கப்பட்ட மேசியாவை பற்றி எழுதியிருந்தார். (ஏசா 53:12) இந்த மேசியாவின் நாமங்கள் எப்படிபட்டவை என்று ஏசா 9:6-ல் சொல்லப்பட்டுள்ளது தீர்க்கதரிசனமாக ஆனால் யூதர்கள் ரோமாபுரியில் அடிமைத்தனத்திலிருந்த போது தங்களை விடுவிக்க கூடிய ஒரு இராஜாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அதாவது அவர் ஒரு ராஜாவாக பிறந்து நம்முடைய அடிமைத்தனத்தை உடைத்து நம்மை சுதந்திரவாதியாக மாற்றுவார் என்று கருதிக்கொண்டு இருந்தனர். ஆனால் மேசியா வந்து நம் பாவத்திற்காக சிலுவையில் மரிப்பார் என்று நம்பவில்லை. அதனால் மேசியா வருவார் என்று காத்துக் கொண்டு இருந்தது இருக்கிறது யூதர்கள் தான்.

இயேசுவுக்கு அநேக பெயர்கள் உண்டு. இயேசு என்றால் “இரட்சிப்பவர்” என்று பொருள் பொதுவாக கிறிஸ்து என்ற பெயரை சேர்த்தே வழங்குவார்கள். கிறிஸ்து என்பது ஒரு கிரேக்க சொல் இது எபிரெய பதமான மேசியா என்ற சொல்லுக்கு இணையானது. இந்த இரண்டு பெயர்களும் அபிஷேகிக்கப்பட்டவர் ( அல்லது) ஒரு குறிப்பிட்ட பணிக்காக தேவனால்

அபிஷேகிக்கப்பட்ட ஒருவர் என்று பொருள்படும்.

லூக்கா 2:36, 38. சிமியோன் பேசி முடிந்த பின், அன்னாள் என்ற தீர்க்கதரிசியும் குழந்தை இயேசுவைப்பற்றி பேசினாள். அவள் ஆசேர் கோத்திரத்தைச் சேர்ந்தவள் அவள் எருசலேமில் மீட்பு உண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்துப் பேசினாள்.எருசலேமின் யூதர்களில் அநேகர் மேசியாவுக்காக காத்திருந்தும் அவர் வந்த பொழுது அநேகருக்கு அடையாளம் தெரியவில்லை. தேவ குமாரன் ஒரு மாட்டு தொழுவத்திலே ஒரு ஏழை தச்சனுக்கு மேசியா மகனாகப் பிறப்பார் என்று நம்பமுடியவுல்லை. அதனால் ஏற்றுக் கொள்ளவில்லை எதிர்பார்த்த ஜனங்களே! மேசியாவை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது வருந்ததக்க செய்தி.

பிரியமானவர்களே இதுவரை படித்தது உங்களுக்கு மிகுந்த பிரயோசனமாயிருக்கும் என்று நம்புகிறேன். இயேசுவின் வரலாற்று பின்னனியத்தை வேதப்புத்தகத்திலிருந்து பார்த்தோம். இன்னும் சில சுவாரசியமான காரியங்களையும் அதாவது பாவ பாரிகாரியங்கள், அதன் விதிமுறைகள் என சுவையான பகுதிகளோடு மீண்டும் அடுத்த பகுதியில் எழுத்தின் மூலம் சந்திக்கிறேன். இதனை வாசித்த ஒவ்வொரு உள்ளங்களையும் தேவன் அளவில்லமால் ஆசீர்வதித்து உயர்த்துவார்.

ஆமென்.

### உங்கள் கவனத்திற்கு

**நமது செய்தி மடல் உங்களுக்கு இலவசமாக தரப்படுகிறது. உங்களால் இயன்ற காணிக்கையை அனுப்பி இவ்வூழியத்தை தாங்குங்கள். பிறருக்கும் அறிமுகம் செய்யுங்கள்.**

**உங்கள் காணிக்கைகளை**

HDFC BANK
We understand your world

**மூலமாகவும் அனுப்பலாம்.**


**KING TABERNACLE TRUST**
**A/C. No. : - 50200015082760 | IFSC Code :- HDFC0004142**
**Branch : SIDDHAPUDUR, Coimbatore**




## தேவ நாமம் மகிமைபடுவதாக

கேரளாவில் கடந்த 8 ஆம் மாதத்தில் மழை வெள்ளத்தால் அம்மாநில் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள் என்பதை அனைவரும் அறிவோம்! தமிழ் நாட்டில் பல இடங்களில் இருந்தும் கேரளாவிற்கு நிவாரண பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டது. இருப்பினும் நமது **KING TABERNACLE TRUST** மூலம் நாமும், பொருட்களை சேகரித்தோம். அநேகர் தங்கள் பொருட்களாலும், பணத்தினாலும் உதவினீர்கள். அதை நாம் 28.08.2018 அன்று திருச்சூர் பகுதியை சுற்றி பாதிக்கப்பட்ட ஊர்களில் நேரடியாக சென்று துணி, பெட்சீட், அரிசி போன்ற சில பொருட்களை முகாம்களில் தங்கியிருந்த மக்களிடம் சென்று கொடுத்தோம். கொடுத்து தாங்கிய உங்கள் யாவரையும் மீண்டும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறோம். நீங்கள் வாழ்ந்து சுகமாயிருப்பீர்கள், உங்களுக்காக ஜெபிக்கிறோம், நீங்களும் எங்களுடன் ஊழியத்தில் இணைந்து கர்த்தருடைய நாமத்தை மகிமைபடுத்துங்கள்.

ஆமென்!





# பணித்தள செய்திகள்

நமது பணித்தளத்தின் ஒவ்வொரு மாதமும் நடைபெறுகிற செய்திகள் மற்றும் ஜெபக்குறிப்புகள், நமது ஜெப பங்காளர்கள் ஒவ்வொரு வரும் தொடர்ந்து ஜெபியுங்கள்

பணித்தளம் : **வழுக்குபாறை**

கோவை மாவட்டம்

மிஷனரி : **சகோ. டேவிட் மணி**

**ஜெபம் :**

- அன்னாள் என்ற தாயார் சபைக்கு தொடர்ந்து வந்து கொண்டுள்ளார் அவர்களின் மகன் செல்வராஜ் என்பவருக்கு திருமணம் விரைவில் நடக்க ஜெபித்துக் கொள்ளுங்கள்.
- அன்னமரியாள் என்ற சகோதரி இந்த மாதம் பிரசவத்திற்காக மருத்துவமனைக்கு செல்ல உள்ளார். அவர்களின் சுகப்பிரசவத்திற்காகவும் தாயும் சேயும் வீடு திரும்ப ஜெபிக்கவும்.
- விட்டுபோன சிறுவர் ஊரியம் மறுபடியும் தொடர ஜெபிப்போம்.
- சபைக்கு என்று இடம் வாங்க வேண்டும் என்ற கட்டாயத்தில் இருக்கிறோம். தற்பொழுது உள்ள இடம் நமக்கு நிரந்தரம் கிடையாது. ஜெபிப்போம்.

**துதிக்க :**

- கடந்த மாதம் 21 நாள் தொடர்ந்து அதிகாலை ஜெபம் நடத்த தேவன் உதவி செய்தார். மேலும் 21, 22, 23 ஆகிய மூன்று நாள் விஷேசித்த கூட்டம் நடத்தவும் அதன் மூலம் அற்புதங்கள் நடைபெற்றது தேவன் செய்த உதவிகளுக்காக துதிக்கிறேன்.

பணித்தளம் : **ஒத்தக்கால்மண்டபம்**

கோவை மாவட்டம்

மிஷனரி : **சகோ. பிரேம்குமார்**

**ஜெபம் :**

- புதிதாக வாலிபர் கூடுகை ஒழுங்கு செய்யப்பட்டு நடந்து வருகிறது, அப்பகுதியில் இரட்சிக்கப்படாத 25 வாலிபர்கள் வருகிறார்கள் ஆகவே அவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.
- புதிதாக ஜனங்கள் சபைக்கு வந்துக்கொண்டு இருக்கிறார்கள், அவர்கள் கர்த்தருக்குள் பெலப்பட ஜெபிப்போம்.
- வரக்கூடிய கிறிஸ்துமஸ் ஒத்தக்கால்மண்டபம் சார்பாக பெரிய அளவில் கிறிஸ்துமஸ் விழா ஒன்று நடத்தலாம் என்று முடிவு செய்து இருக்கிறோம் ஆகவே அதற்காகவும் ஜெபியுங்கள்.
- சபைக்கு வரக்கூடிய ஒரு தாயார் நடக்க முடியாமல் இருக்கிறார்கள் அவர்களுக்காக ஜெபிப்போம்.

**துதிக்க :**

- கடந்த மாதம் நடைபெற்ற குடும்ப கூடகையை கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்தார் அதற்காக துதிக்காலம்.

பணித்தளம் : **மீனாட்சிபுரம்**

கோவை மாவட்டம்

மிஷனரி :

**சகோதரி. கிரேஸி பிரிஸில்லா**

**ஜெபம் :**

- லேமா என்ற பாட்டி அவர்கள் உடல் நிலை சரியில்லாமல் கை, கால் வீங்கியுள்ளது அவருக்கு உடல் சுகம் கிடைக்க ஜெபிக்கவும்.
- கன்னியம்மாள் என்பவருக்கு கேட்கும் திறன் குறைந்துவிட்டது. எனவே தேவன் சுகம் கொடுக்க ஜெபிக்கவும்.

**துதிக்க :**

கடந்த மாதங்களில் தேவன் குறைந்தது 12-ஆத்துமாக்கள் சபை ஆராதனையில் கலந்து கொள்ள உதவி செய்தார் அதற்காக தேவனை துதிக்கிறேன். கடந்த நாட்களில் குடும்பத்திற்கு தேவையான உணவுப்பொருட்கள் நாங்கள் வாங்கி கொடுக்க உதவி செய்தார்.

பணித்தளம் : P.N.**புதூர்**

கோவை மாவட்டம்

மிஷனரி :

**சகோ. கோவை ஜெபராஜ்**

**ஜெபம் :**

- RSS இந்துத்துவ அமைப்பின் சகோதரர் ராமநாதன் அவர்கள் தேவனை அறிந்து கொள்ள ஜெபியுங்கள்.
- சகோதரர் அருண்குமார் மது போதையில் அவரின் தாயாரை அடித்து உதைக்கிறார். அவரின் மனமாற்றத்திற்காக ஜெபியுங்கள்.

**துதிக்க :**

- செப். 16 ஞாயிறு மாலை ஆராதனை வேளையில், அப்பகுதியை சேர்ந்த இந்துத்துவா அமைப்பாளர் ஆராதனை கூடாரத்தில் புகுந்து ஆண்டவரை ஆராதிக்க விடாமலும், சபையாரையும், போதகரையும் மிரட்டல் விடுத்தனர். ஆனாலும் நம் தேவன் நல்லவர், காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் இதை விசாரித்து அவர்களை அழைத்து சமாதானம் பேசி, நம்மிடம் அவர்களை மன்னிப்பு கேட்க செய்தார், இதற்காக இயேசுவை துதியுங்கள்
- செப்டம்பர் 25 முதல் அக்டோபர் 1 வரை அந்தமான் தீவுகளிலும் பல சபைகளிலும் சென்று ஊழியத்தில் பயன்படுத்தியதற்காக துதியுங்கள்.

# ஊழியர்களின் கிறிஸ்மஸ் நன்கொடை

ஆண்டு முழுவதும் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றி, ஊழியத்தின் பாதையில் பாடுபட்டு வரும் மிஷனெரிகளுக்கு டிசம்பர் மாதத்தில் கிறிஸ்மஸ் பரிசு கொடுக்க தீர்மானித்து உள்ளோம். அதன்படி இந்த ஆண்டு இதற்கென ஒரு பெரும் தேவை உள்ளது, இதற்காக ஏவப்படுகிற தேவப்பிள்ளைகள் ஜெபித்து, கொடுத்து உதவிட கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

**KTM - SIMM குடும்பத்தார்.**




IF UNDERLIVERED PLEASE RETURN TO

**KING TABERNACLE -** SouthIndia Missionary Mission

1/1C, Rajaji Nagar, Bimetal Company Back Side, P.N. Pudur, Coimbatore.

**M** : 9384741252 | e : info@kingtabernacle.com | **www.kingtabernacle.com**


Use Pin code for Speed Post / If Undelivered Please Return to

**UNDER CLAUSE 121 of PO. guide up to 100gms Rs. 1/-**

**PRINTED BOOK ONLY**
**NOT FOR SALES**


Published by R. Premkumar & Editing by M. Jebaraj @ King Tabernacle - South India Missionary Mission

Printed by DESIGN ART, 204, 9th Street, Gandhipuram, Coimbatore 641012. | T : 9677731326

**PRIVATE CIRCLE ONLY**